# கந்தரோடையில் ஆதியிரும்புக்காலப் பண்பாடும் பௌத்தமதமும் – ஓர் ஆய்வு

**துஷல்யா, இ., சிவரூபி, ச.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**shalyarasan@gmail.com**

*இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் தமிழர்கள் பண்டைய காலம் தொட்டு செறிவாக வாழ்ந்து வரும் பிரதேசங்களாகும். இப்பிரதேசங்களில் யாழ்ப்பாணக் குடாநாடும் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றினை கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் தொன்மையை வெளிப்படுத்துவதில் தொல்லியல் மரபுரிமைகளுக்கு முக்கிய பங்குண்டு. அந்தவகையில் காலத்துக்கு காலம் கந்தரோடையில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் கந்தரோடையினை இலங்கையின் முக்கிய தொல்லியல் மையமாக எடுத்துக்காட்டியுள்ளன. கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் மரபுரிமைகளில் பௌத்த மதம் சார்ந்தவைகளும் உள்ளடங்குகின்றன. எனினும் கந்தரோடையின் பௌத்தமத எச்சங்கள் தொடர்பாக உண்மையான வரலாற்றுப் பின்னனியினை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலையே நிலவுகின்றது. இலங்கையில் பல்லினப் பண்பாடானது சமயப் பண்பாட்டின் அடிப்படையில் இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் எனப் பார்க்கப்பட்டாலும் காலத்திற்கு காலம் வெளியிடப்பட்ட ஆய்வுகளில் பௌத்த மத எச்சங்கள் ஒரு இனத்துக்கு உரியனவாகவே நோக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் சிங்கள மக்கள் பௌத்த மதத்தை சார்ந்தவர்களாகவும் தமிழ் மக்கள் இந்து சமயத்தை சார்ந்தவர்களாகவும் தற்போது நோக்கப்படுகின்றார்கள். எனினும் இந்நிலையே வரலாற்றின் ஆரம்பகாலத்தில் இருந்து நிலவியது எனக் கொள்வது பொருத்தமற்றதாகும். குறிப்பாக வட இலங்கையில் பௌத்த மத எச்சங்கள் கிடைக்கப்பெறும் போது அவை ஒரு இனம் வாழ்ந்து விலகியதற்கான ஆதாரங்களாகவே காலத்திற்கு காலம் நோக்கப்படுகின்றன. இவ்வாறான போக்கிற்கு தொல்லியல் ஆய்வுகளில் சமகால அரசியல் சூழ்நிலைகள் ஏற்படுத்திய தாக்கங்களும் காரணமாக அமைந்திருந்தன. அந்தவகையில் கந்தரோடையில் கிடைக்கப்பெற்று வரும் பௌத்த மத மரபுரிமைச் சின்னங்களை ஒரு இனச்சார்பாக பார்ப்பது எந்தளவிற்கு பொருத்தமானது? யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில் பௌத்தமத மரபுரிமைச்சின்னங்களின் வகிபாகம் எத்தகையது? மற்றும் கந்தரோடை மரபுரிமைச் சின்னங்கள் முறையாக பாதுகாக்கப்படுகின்றனவா? போன்ற ஆய்வு வினாக்களினை அடிப்படையாகக் கொண்டு, வடஇலங்கையின் பௌத்த மரபுரிமைகளினது வரலாற்றுப் பின்னணியை வெளிப்படுத்துதல், யாழ்குடாநாட்டு வரலாற்றில் கந்தரோடை மரபுரிமைச் சின்னங்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துதல் மற்றும் கந்தரோடையின் பௌத்த மத மரபுரிமைச்சின்னங்களை பாதுகாப்பதும் அதனை கலாசாரச் சுற்றுலா நோக்கில் பார்ப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்தல் போன்றன இவ்வாய்வுக்குரிய நோக்கங்களாக அமைகின்றன. இவ்வாய்வு நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு, ஆய்வுக்குரிய தரவுகள் களஆய்வு அடிப்படையிலும், இரண்டாம்நிலைத் தரவுகள் பௌத்தமதம்*